# லண்டன் மேயர் மற்றும் லண்டன் சட்டமன்றத் தேர்தல்கள்

# 6 மே 2021

## நாடகுறிபபில குறிததுக கொளளவும. மீணடும.

லணடன 6 மே 2021 அனறு வாககளிககிறது.
நீஙகள எவவாறு பஙகேறகலாம எனபதை
**londonelects.org.uk** எனற வலைததளததில
தெரிநது கொளளுஙகள

**உஙகள எணணததை வெளிபபடுததுஙகள.**

LONDON ELECTS

6 மே 2021 அன்று லண்டனில் வசிக்கும் நபர்கள் லண்டன் மேயர் மற்றும் லண்டன் சட்டமன்றத்தின் 25 உறுப்பினர்களுக்கு வாக்களிக்கலாம்.

லண்டன் நகரத்திற்கு வருகை புரியும், அங்கு வசிக்கும் அல்லது பணி செய்யும் ஒவ்வொருக்கும் அந்த நகரத்தை சிறந்த இடமாக ஆக்குவது லண்டன் மேயரின் பணியாகும்.

இதில் கொள்கைகளை வகுத்தல், வரவு செலவுத் திட்டங்கள் அமைத்தல், முக்கிய நிகழ்வுகளை மேற்பார்வையிடல் மற்றும் உலகம் முழுவதிலும் லண்டனுக்கு ஆதரவு அளித்தல் ஆகியவை அடங்கும்.
- இவை அனைத்தும் மேயரின் தொலைநோக்குப் பார்வைக்கு இணக்கமாக மற்றும் லண்டன் மற்றும் லண்டன் வாசிகளுக்காக மேற்கொள்ளப்படும்.

லண்டன் சட்டமன்றம் 25 உறுப்பினர்களைக் கொண்டுள்ளது – அதில் 11 பேர் முழுத் தலைநகரின் பிரிதிநிதிகள் மற்றும் 14 பேர் லண்டனின் தொகுதிகளால் தேர்ந்தெடுக்கப்படுபவர்கள்.

சட்டமன்றம் சிட்டி ஹாலில் இருந்து லண்டன் வாசிகளின் கண்களாகவும் காதுகளாகவும் செயல்படுகிறது. உறுப்பினர்கள் மேயர் தொடர்பான உத்திகள், முடிவுகள் மற்றும் நடவடிக்கைகளை ஆராய்ந்து அவை பொதுநலனுக்கானவை என்பதை உறுதிசெய்வதன் மூலம் மேயரை பொறுப்பேற்க வைக்கிறார்கள்.

## எப்போது வாக்களிப்பது

6 மே 2021 அன்று, வாக்குச் சாவடிகள் காலை 7 மணியிலிருந்து இரவு 10 மணி வரை திறந்திருக்கும். உங்கள் வாக்கைப் பதிவு செய்ய நீங்கள் முன்கூட்டியே வருவதற்குத் திட்டமிட்ட வேண்டும்.

நீங்கள் அஞ்சல் மூலம் வாக்களிக்கிறீர்கள் என்றால், வாக்குச் சீட்டுகளை தேர்தலுக்கு முன்பாகவே பெறுவீர்கள். நீங்கள் அவற்றை 6 மே 2021 அன்று இரவு 10 மணிக்குள் திருப்பியளிப்பதை உறுதிசெய்ய வேண்டும்.

## யார் வாக்களிக்கலாம்

நீங்கள் பின்வரும் நிபந்தனைகளின் பேரில் வாக்களிக்கலாம்:
- 6 மே 2021 அன்று உங்கள் வயது 18 அல்லது அதற்கு மேல்
- நீங்கள் லண்டனில் வசிக்கும் ஒரு பிரிட்டிஷ், EU அல்லது தகுதிபெறும் காமன்வெல்த் குடிமகன்
- 19 ஏப்ரல் 2021 க்குள் வாக்களிக்கப் பதிவுசெய்துள்ளீர்கள்

நீங்கள் வாக்களிக்க www.gov.uk/register-to-voteஇல் பதிவு செய்யலாம் அல்லது உங்கள் உள்ளூர் கவுன்சிலைத் தொடர்புகொள்ளவும்.

# எங்கு வாக்களிப்பது

நீங்கள் வாக்களிக்க 3 வழிகள் உள்ளன.



## 1 உங்கள் வாக்குச் சாவடியில்:

- மே 6 க்கு முன்பாக உங்கள் வாக்குச் சாவடி விவரங்களுடன் உங்களுக்கு ஒரு 'வாக்கெடுப்பு அட்டை' அனுப்பப்படும்.
- இந்த அட்டையில் குறிப்பிடப்பட்டிருக்கும் வாக்குச் சாவடியில் மட்டுமே நீங்கள் வாக்களிக்க முடியும்.
- உங்களுக்குத் தேவையெனில் வாக்குச் சாவடியில் உள்ள ஊழியர்கள் நீங்கள் வாக்குச்சீட்டை புரிந்துகொள்ள உதவுவார்கள்.
- வாக்குச் சாவடிக்கு நீங்கள் உங்கள் வாக்கெடுப்பு அட்டையை எடுத்துச் செல்லத் தேவையில்லை, ஆனால் அது அங்குள்ள ஊழியர்களுக்கு உதவிகரமாக இருக்கும்.

**வாக்குச் சாவடியில் என்ன எதிர்பார்க்கலாம்:**

மே 6 அன்று வாக்களிக்க வாக்குச் சாவடிகள் பாதுகாப்பான இடங்களாகும். உங்களுக்கு உடல்நிலை சரியில்லை எனில் நேரடியாக வாக்களிக்கச் செல்ல வேண்டாம். உங்களையும் மற்றவர்களையும் பாதுகாப்பாக வைத்திருக்க நீங்கள் செய்யக்கூடியவை இவை தான்:

- உங்களுக்கு விலக்களிக்கப்பட்டிருந்தால் ஒழிய முகக் கவசத்தை அணியவும்
- உங்கள் கைகளைச் சுத்தம் செய்யவும் - கை சுத்திகரிப்பான் அங்கு இருக்கும்
- சமூக விலகலை மற்றும் ஒரு வழி அமைப்புகளைக் கடைபிடியுங்கள்
- நீங்களே பேனா அல்லது பென்சில் எடுத்து வாருங்கள்

COVID-19 மற்றும் தேர்தல்கள் பற்றிய சமீபத்திய தகவலுக்கு, www.londonelects.org.uk/Covid-இல் உள்ள லண்டன் எலக்ட்ஸ் வலைத்தளத்திற்கு வருகைபுரியவும்

உங்களால் வாக்குச் சாவடிக்கு நேரடியாகச் செல்லமுடியவில்லை எனில் நீங்கள் அஞ்சல் மூலம் அல்லது பிராக்ஸி(பதிலாள்) மூலம் வாக்களிக்க விண்ணப்பிக்கலாம்.

**2** **அஞ்சல் மூலம்:**

- உங்கள் வாக்குச் சீட்டுகள் தேர்தல் நாளிற்கு ஒரு வாரத்திற்கு முன்பு உங்களுக்கு அனுப்பப்படும்.
- உங்கள் வாக்கைப் பதிவுசெய்து பின்வரும் நேரத்திற்கு முன் அவை வருமாறு திருப்பி அனுப்பவும்
  **6 மே 2021** அன்று இரவு **10** மணி.
- உங்கள் கையொப்பம் மற்றும் பிறந்த தேதியுடன் பாதுகாப்பு உறுதி ஆவணத்தை நிறைவு செய்வதை நினைவில் கொள்ளவேண்டும்.
- நீங்கள் உரிய நேரத்திற்குள் உங்கள் வாக்குகளைத் திருப்பியளிக்காவிட்டால், அவை கணக்கில் எடுக்கப்படாது.
- அவற்றை அஞ்சலில் அனுப்ப நீங்கள் மறந்துவிட்டால், நிறைவு செய்த தபால் வாக்கை வழங்கப்பட்ட உறையிலிட்டு அதை உங்கள் வாக்குச் சாவடிக்கு நீங்கள் எடுத்துச் செல்லலாம்.

புதிய தபால் வாக்கு விண்ணப்பங்களுக்கான காலக்கெடு மற்றும் தற்போதுள்ள தபால் அல்லது பிராக்ஸி வாக்குகளில் மாற்றங்கள் **20** ஏப்ரல் **2021** மாலை **5** மணி ஆகும்.



## 3 பிராக்ஸியைப் பயன்படுத்துதல்:

- உங்களால் வாக்குச் சாவடிக்குப் போக இயலாவிட்டால், நீங்கள் நம்பும் ஒருவரை உங்கள் பிராக்ஸியாக இருக்கக் கேட்கலாம்.
- இதன் அர்த்தம் அவர்கள் உங்கள் சார்பாக வாக்களிக்கலாம் ஆனால் நீங்கள் யாருக்கு வாக்களிக்க விரும்புகிறீர்கள் என்பதை அவர்களிடம் சொல்ல வேண்டும் என்பதாகும்.

பிராக்ஸி (தபால் பிராக்ஸி அல்லது அவசரகாலப் பிராக்ஸிக்கள் இல்லை) மூலம் வாக்களிப்பதற்கான புதிய விண்ணப்பங்களைப் பெறுவதற்கான காலக்கெடு 27 ஏப்ரல் 2021 மாலை 5 மணி ஆகும்.


அவசரகாலப் பிராக்ஸி விண்ணப்பங்களைப் பெறுவதற்கான காலக்கெடு 6 மே 2021 மாலை 5 மணி ஆகும்.

**மேலும் தகவலுக்கு londonelects.org.uk**
**@LondonElects**
**#LondonVotes**

# எப்படி வாக்களிப்பது

வாக்களிக்க உங்களுக்கு 3 வாக்குச் சீட்டுகள் கொடுக்கப்படும்:

**லண்டன் மேயர் (பிங்க் வாக்குச் சீட்டு):**




- லண்டன் மேயருக்கு உங்களுக்கு 2 தேர்வுகள் உள்ளன.
- உங்கள் முதல் தேர்வை நெடுவரிசை A இல் குறியிடவும் [X].
- வேறுபட்ட இரண்டாவதுத் தேர்வை நெடுவரிசை B இல் குறியிடவும் [X].
- நீங்கள் உங்கள் முதல் தேர்வைக் குறியிட வேண்டும் இல்லையெனில் உங்கள் வாக்கு கணக்கில் ஏற்கப்படாது.
- ஒவ்வொரு வாக்கும் வேறுவேறு வேட்பாளருக்கு அளிக்கப்படவேண்டும்.

**தொகுதி லண்டன் சட்டமன்ற உறுப்பினர் (மஞ்சள் வாக்குச் சீட்டு):**



- உங்கள் பகுதியில் இருந்து லண்டன் சட்டமன்றப் பிரதிநிதியாக யார் இருக்கவேண்டும் என்பதைத் தேர்வு செய்யவும்.
- ஒரே ஒரு வேட்பாளருக்கு மட்டும் வாக்களிக்கவும்.
- உங்கள் தேர்வுக்கு அடுத்து குறியிடவும் [X].

**லண்டன் முழுவதற்குமான சட்டமன்ற உறுப்பினர் (ஆரஞ்சு வாக்குச் சீட்டு):**



- லண்டன் சட்டமன்றத்தில் லண்டன் முழுவதற்குமான பிரதிநிதியாக யார் இருக்கவேண்டும் என்பதைத் தேர்வு செய்யவும்.
- ஒரே ஒரு முறை மட்டும் வாக்களிக்கவும்.
- உங்கள் தேர்வுக்கு அடுத்து குறியிடவும் [X].

## அதிகத தகவல

2021 ஏபரலில, லணடனில வாககளிககப பதிவு செயதவரகள அனைவரும ஒரு கையேடடைப பெறுவாரகள. இதில அனைதது லணடன சடடமனற வேடபாளரகளின படடியலும இருககும. தேரதல அறிககைககளை வெளியிட நினைககும மேயர வேடபாளரகளிடமிருநது சிறு தேரதல அறிககைகளும இதில அடஙகும. மேலும எஙகு, எபபடி வாககளிகக வேணடும எனபது குறிதத முககியத தகவலகளையும கொணடிருககும. உஙகள வீடடிறகு இது அனுபபபபடுவதை எதிரபாருஙகள.

உஙகளுககு ஏதாவது கேளவி இருநதால தொடரபு கொளளவும:
info@londonelects.org.uk

COVID-19 மறறும தேரதலகள பறறிய சமீபததிய தகவலுககு, www.londonelects.org.uk/Covid-இல உளள லணடன எலகடஸ வலைததளததிறகு வருகைபுரியவும